தீயணைப்பு ஆணையம் அமைப்பு: தலைவராக சங்கர் ஜிவால் நியமனம்

சென்னை, ஆக. 29: தீயணைப்பு மற்றும் பேரிடர் மீட்புப் பணி ஆணையம் அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டது. இதன் தலைவராக தமிழக காவல் துறையின் தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தீ விபத்து மற்றும் மீட்புப் பணிகளில் புதிய தொழில் நுட்பங்களைச் செயல்படுத்துதல்; கட்டடங்களுக்கு வழங்கப்படும் தீப் பாதுகாப்பு சான்றிதழ் வழங்குதல் பணிகளை முறைப்படுத்துதல்; தீயணைப்பு மற்றும் மீட்பு பணித் துறை ஊழியர்களுக்கு தேவையான திட்டங்களை அறிமுகப்படுத்துதல்; புதிய பயிற்சி முறைகளை செயல்படுத்துதல் ஆகியவற்றுக்காக தீ ஆணையம் (தீயணைப்பு ம ற்றும் பேரிடர் மீட்பு பணி ஆணையம்) அமைக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த 2022 ஜூன் 10-ஆம் தேதி அறிவித்தார்.

இதை அமல்படுத்தும்வகையில் தீயணைப்பு மற்றும் பேரிடர் மீட்பு பணி ஆணையம் அமைப்பதற்குரிய அரசாணையை தமிழக அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்டது. இந்த ஆணையத்தின் தலைவராக தமிழக காவல் துறையின் தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், தமிழக காவல் துறையின் தலைமை இயக்குநர் பதவியில் இருந்து ஆக.31-ஆம் தேதி ஓய்வு பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை வெள்ளிக்கிழமை சந்தித்து வாழ்த்து பெற்ற தீ ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால்.

ஆணைய நிர்வாகிகள்: ஆணையத்தின் ஒருங்கிணைப்பாளராக தமிழக தீயணைப்புத் துறை இயக்குநரும், நிர்வாக உறுப்பினராக சிஎம்டிஏ உறுப்பினர் செயலரும், பொதுப்பணித் துறை ஓய்வு பெற்ற பொறியாளர் கே.சத்தியமூர்த்தி, ஓய்வு பெற்ற தீயணைப்புத் துறை அதிகாரி எம்.நமச்சிவாயம் ஆகியோர் நிரந்தர உறுப்பினர்களாகவும், இந்திய மருத்துவ சங்கச் செயலர் ஏ.எம்.இக்ராம் தற்காலிக உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆணையம், செப்.1-ஆம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வருகிறது.

10 ஆண்டு அழைப்புகள் ஆய்வு: ரயில், சாலை விபத்துகள், புயல், வெள்ளம் உள்ளிட்ட பேரிடர் மீட்பு பணிகள், தீ விபத்துகள் போன்றவற்றில் முழுமையான திறனுடன் தீயணைப்புத் துறை செயல்படுவது குறித்து இந்த ஆணையம் ஆய்வு செய்யும். இதற்காக தீயணைப்புத் துறை விதிகள் மறு ஆய்வு செய்து கொள்கைகளை வகுக்கும் பணியில் ஈடுபடும். விபத்து குறித்த பொதுமக்களிடமிருந்து அழைப்பு கிடைத்த உடன் தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்துக்குச் சென்று செயல்படும் நேரத்தைக் குறைப்பது உள்பட பல்வேறு ஆய்வுகள் நடத்தப்படும். இதற்காக கடந்த 10 ஆண்டுகளில் பொதுமக்களின் அவசர அழைப்புகள், தீயணைப்புத் துறை செயல்பாட்டு நேரம் ஆகியவை ஆய்வு செய்யப்படும்.

இதன் ஒரு பகுதியாக அறிவியல் பூர்வமான வரைப்படங்கள் மூலம் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படும். இதே போல தீயணைப்புத் துறை வாகனங்கள், தீயணைப்பு கருவிகள் ஆகியவற்றை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைகளும் ஆணையத்திடம் இருந்து பெறப்படும். மேலும், தீயணைப்பு படை வீரர்கள் உடைகள், வாகனங்கள், கருவிகள், பயிற்சிகள், தொலைத்தொடர்பு கருவிகள் ஆகியவை நவீனமயமாக்குவதற்கு பரிந்துரைகள் பெறப்படும்.

2 ஆண்டுகளில் முழுமையான பரிந்துரை: தீயணைப்புத் துறையால் வழங்கப்படும் தடையில்லா சான்றிதழ், உரிமங்கள், கட்டடங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு சான்றிதழ் ஆகியவை முறைப்படுத்துவதற்குரிய வழிமுறைகளை ஆணையம் வழங்கும். இந்த ஆணையம் இடைக்கால வரைவு பரிந்துரைகளை ஓராண்டுக்குள்ளும், இறுதி பரிந்துரைகளை இரு ஆண்டுகளுக்குள்ளும் வழங்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அரசாணையின்படி, சங்கர் ஜிவால் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் செப்.1-ஆம் தேதி பொறுப்பு ஏற்கவுள்ளனர்.

பிகாரின் நிலை தமிழகத்தில் ஏற்பட்டுவிடக் கூடாது

முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆக. 29: சிறப்பு வாக்காளர் திருத்தம் என்ற பெயரில் பிகாருக்கு நேர்ந்த நிலை தமிழகத்தில் ஏற்பட்டுவிடக் கூடாது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோவின் மகள் திருமண விழா சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. திருமண விழாவை நடத்திவைத்து மணமக்களை வாழ்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோவின் வழக்குரைஞர் பணி, திறமையை நான் மட்டுமல்ல; நீதிபதிகள் பலர் வியந்து பாராட்டியுள்ளனர்.

தமிழகத்தின் உரிமைக்காக அவரது குரல் நாடாளுமன்றத்தில் தற்போது ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு நாடு, எத்தகைய பிரச்னைகளை எதிர்கொண்டிருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம்.

குறிப்பாக, பிகாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு வாக்காளர் திருத்தம் என்ன மாதிரியான பிரச்னைகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அதிகம் விளக்கத் தேவையில்லை.

மக்களிடையே இதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இரு நாள்களுக்கு முன் நான் பிகார் சென்று, வாக்காளர் உரிமைப் பயணம் என்று ராகுல் காந்தி நடத்திய விழிப்புணர்வு பயணத்தில் பங்கேற்றேன்.

பிகாரின் நிலை தமிழகத்தில் ஏற்படக் கூடாது என்பதற்காக இப்போதே நாம் விழிப்புணர் வைப் பெற்று தயாராக வேண்டும்.

ஜெர்மனி - பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு ஒரு வார கால பயணமாக சனிக்கிழமை செல்கிறேன். நம்முடைய திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழகத்துக்கு இதுவரை சுமார் ரூ.10 லட்சம் கோடி தொழில் முதலீடுகளை ஈர்த்துள்ளோம்.

இதற்கான என்னுடைய வெளிநாட்டுப் பயணங்களின்போது, முதலீட்டாளர்களும் தொழில் நிறுவனங்களும் தமிழகத்தில் முதலீடு செய்ய மனபூர்வமாக ஆர்வம் காட்டுவதை உணர முடிந்தது. தற்போதைய பயணத் திட்டம் குறித்து நிச்சயம் சொல்வேன் என்றார்.

நிகழ்வில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, அந்தியூர் செல்வராஜ், திருச்சி சிவா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் டி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.எஸ்.பாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவு: சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டையொட்டி, புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலை.யில், செப். 4-ஆம் தேதி நடைபெறும் கருத்தரங்கில் பெரியார் ஈவெராவின் படத்தை திறந்து வைத்து, 'தென்னக மயக்கம் தீர்த்த சுயமரியாதை இயக்கம்' குறித்த இரு நூல்களையும் பன்னாட்டு அறிஞர் பெருமக்கள் முன்னிலையில் வெளியிடுகிறேன். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; பெரியாரியம் உலகத்தவர் அனைவருக்கும்' என்று பதிவிட்டுள்ளார்.

பெரியார் பல்கலை. முன்னாள் தமிழ்த் துறை தலைவர் பணியிடை நீக்கம்

சேலம், ஆக. 29: பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான சேலம் பெரியார் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் முதுநிலைப் பேராசிரியர் தி.பெரியசாமி வெள்ளிக்கிழமை மாலை பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

பேராசிரியர் தி.பெரியசாமி மீது பல்வேறு முறைகேடுகள், புகார்கள் மீதான உண்மைத் தன்மை பல்கலைக்கழக உள்ளக விசாரணையில் உறுதியானது. அவர் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த காலத்தில் 19க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மாணவர்கள் தங்கள் ஆய்வை முடிக்க முடியாமல் பாதியிலேயே படிப்பை நிறுத்தியதாக புகார் எழுந்தது.

தனக்கு வேண்டிய பேராசிரியர்களின் மாணவர்களுக்கு மட்டும் கையொப்பம் இடுவது, பிற பேராசிரியர்களின் மாணவர்களுக்கு காலம் தாழ்த்துவது அல்லது மிரட்டுவது போன்ற செயல்களில் பெரியசாமி ஈடுபட்டு வந்ததாகக் கூறப்பட்டது.

இது தவிர, வகுப்பறையில் ஜாதிப் பெயரைச் சொல்லி இழிவுபடுத்துவது, ஒருமையில் பேசுவது, மாணவர்களை மிரட்டுவது போன்ற செயல்களில் ஈடுபட்டதாக அவர் மீது வந்த புகார்களின் அடிப்படையில் மூவர் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. பலகட்ட விசாரணைக்குப் பிறகு, பேராசிரியர் தி.பெரியசாமி மீதான குற்றச்சாட்டுகளை மூவர் குழு உறுதிப்படுத்தியது.

அவர்மீது பல்கலைக்கழக விதிகளின்படி, துறை ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையில், வெள்ளிக்கிழமை மாலை தி.பெரியசாமி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். இதற்கான உத்தரவை துணைவேந்தர் பொறுப்புக் குழு ஒருங்கிணைப்பாளரும், கல்லூரி கல்வி இயக்குநருமான சுந்தரவல்லி பிறப்பித்துள்ளார்.

இன்று ஜி.கே.மூப்பனார் நினைவு நாள்: நிர்மலா சீதாராமன், இபிஎஸ் பங்கேற்பு

சென்னை, ஆக. 29: தமாகா நிறுவனர் ஜி.கே.மூப்பனாரின் 24-ஆவது நினைவு தினத்தையொட்டி, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமி உள்ளிட்டோர் சனிக்கிழமை (ஆக. 30) மரியாதை செலுத்துகின்றனர்.

இதுகுறித்து தமாகா தலைவர் ஜி.கே.வாசன் வெள்ளிக்கிழமை செய்தி:

ஜி.கே.மூப்பனாரின் 24-ஆவது நினைவு நாளை முன்னிட்டு சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அவரது நினைவிடத்தில் சனிக்கிழமை (ஆக. 30) காலை 9.30 மணிக்கு மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள், தமாகா நிர்வாகிகள் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தவுள்ளனர். எனவே, தமாகா மாநில, மாவட்ட நிர்வாகிகள், துணை அமைப்பு நிர்வாகிகள், தொண்டர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

9 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, ஆக. 29: தமிழக காவல் துறையில் 9 ஐபிஎஸ் அதிகாரிகள் வெள்ளிக்கிழமை பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் தீரஜ்குமார் வெள்ளிக்கிழமை வெளியிட்ட உத்தரவு (பழைய பதவி அடைப்புக்குள்):

1. அனிஷா உசேன் - சிலைக் கடத்தல் தடுப்பு பிரிவு ஐஜி (சிபிசிஐடி சிறப்பு புலனாய்வு பிரிவு ஐஜி)
2. எஸ்.லட்சுமி - லஞ்ச ஒழிப்புத் துறை ஐஜி (சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு ஐஜி)
3. சோனல் சந்திரா - சென்னை பெருநகர காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவு வடக்கு இணை ஆணையர் (மத்திய அரசு பணியில் இருந்து திரும்பி வந்துள்ளார்)
4. ஜி.ஜவஹர் - சிபிசிஐடி மெட்ரோ மண்டல எஸ்.பி. (சிபிசிஐடி வடக்கு மண்டல எஸ்.பி.)
5. ஆர்.சுஹாசினி - சென்னை பெருநகர காவல் துறை போக்குவரத்துப் பிரிவு மேற்கு துணை ஆணையர் (கோவை மாநகர காவல்துறை தலைமையிட துணை ஆணையர்)
6. எம்.பி.திவ்யா - கோவை மாநகர காவல் துறை தலைமையிட துணை ஆணையர் (கோவை லஞ்ச ஒழிப்புத்துறை ஏடிஎஸ்பி)
7. பி.எச்.சாஜிதா - சிபிசிஐடி நிர்வாகப்பிரிவு எஸ்பி., கூடுதலாக தெற்கு மண்டல எஸ்.பி. பொறுப்பையும் கவனிப்பார். (மதுரை தமிழ்நாடு சிறப்புக்காவல்படை 6-ஆவது அணி துணை கமாண்டன்ட்)
8. பி.விஜயகுமார் - சென்னை பெருநகர காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவு தெற்கு இணை ஆணையர் (சென்னை பெருநகர காவல் துறையின் சட்டம் - ஒழுங்கு கிழக்கு மண்டல இணை ஆணையர்)
9. பண்டி கங்காதர் - சென்னை பெருநகர காவல் துறையின் சட்டம் - ஒழுங்கு கிழக்கு மண்டல இணை ஆணையர் (சென்னை பெருநகர காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவு தெற்கு இணை ஆணையர்)

என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சிபிசிஐடி மெட்ரோ மண்டல எஸ்.பி.யாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ள ஜவஹர், சிபிசிஐடி வடக்கு மண்டல எஸ்.பி. கூடுதலாக பொறுப்பாக கவனிப்பார் எனக் குறிப்பிடப்படுள்ளது. அதோடு எம்.பி.திவ்யா, பி.எச்.சாஜிதா ஆகியோர் பதவி உயர்வுடன் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இன்று வெப்பநிலை 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும்

சென்னை, ஆக. 29: தமிழகத்தில் சனிக்கிழமை அதிகபட்சமாக 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை உயரக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு: தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்து வந்தாலும், சனிக்கிழமை அதிகபட்சமாக வெப்பநிலை ஒரு சில இடங்களில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.

வெயில் அளவு: தமிழகத்தில் வெள்ளிக்கிழமை அதிகபட்சமாக மதுரை விமான நிலையத்தில் 104.9 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது. மதுரை நகரம் - 103.28, தூத்துக்குடி - 100.76 டிகிரி ஃபாரன்ஹீட் பதிவானது.

6 நாள்களுக்கு மழை: தென்னிந்திய பகுதிகளின்மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால், சனிக்கிழமை (ஆக. 30) முதல் செப். 4 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும்.

சென்னை நகரின் ஒருசில பகுதிகளில் சனிக்கிழமை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. எனினும், அதிகபட்ச வெப்பநிலை 96.8 டிகிரி ஃபாரன்ஹீட்டையொட்டி இருக்கும்.

மழை அளவு: தமிழகத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் பந்தலூர் தாலுகாவில் 150 மி.மீ.பழை பதிவானது. விண்ட் வொர்த் எஸ்டேட் (நீலகிரி) - 120 மி.மீ., சின்னக்கல்லாறு(கோவை), தேவாலா (நீலகிரி), அவலாஞ்சி (நீலகிரி) - 100 மி.மீ., மேல் கூடலூர் (நீலகிரி), சின்கோனா (கோவை), சோலையாறு (கோவை) - 70 மி.மீ., கூடலூர் பஜார் (நீலகிரி), பார்வூட்(நீலகிரி) - 60 மி.மீ. மழை பதிவானது.

HINDUJA HOUSING FINANCE

பதிவு அலுவலகம்: எண். 27-A, டெலைப் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை - 600032.
நிறுவன தலைமை அலுவலகம்: எண். 167-169, 2வது தளம், அண்ணாசாலை, வசந்தப்பேட்டை, சென்னை - 600015. Ph: 044 - 30079113.

பொது அறிவிப்பு

M/s. இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் எனும் நிதி நிறுவன கம்பெனி இதன்மூலம் பொதுமக்கள் அனைவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், கீழே பட்டியலிடப்பட்டுள்ள எங்கள் கிளை ஒன்று புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.
பழைய கிளை முகவரி: எண். 89, அன்னாரி தெரு, ராம்நகர், கோயம்புத்தூர் - 641009.
தற்போதுள்ள அனைத்து வாடிக்கையாளர்களும் புதிய கிளை முகவரி: கதவு எண் 28, முதல் தளம், அன்னாரி தெரு, ராம்நகர், கோயம்புத்தூர் - 641009. பார்வையிடவும் / தொடர்புகொள்ளவும் கேட்டுக்கொள்கிறோம்.
இந்த இடமாற்றத்தால் தங்களுக்கு ஏற்படும் சிரமத்திற்கு வருந்துகிறோம்.

நிறுவனத்தின் செயலர்
சென்னை - CO

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, குப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம்: எண். UO 302, பிளாக் -A, ஈஸ்டோர் சென்டர், கதவு எண்.1073 & 1074, அவிநாசி சாலை, கோயம்புத்தூர் - 641 018.
கிளை அலுவலகம்: 2வது தளம், எண்.185 D, கோவை பிரதான சாலை, மேட்டுப்பாளையம் (நீலகிரி) - 641302

2002 ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர் / அடமானதாரர்களான தங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் 2002 ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் பிரிவு 13 (2)ன் கீழ் இந்த அறிவிப்பு ஏற்பு அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் தங்களுக்கு அனுப்பப்பட்டு அது பட்டுவாடா ஆகாமல் திரும்பப்பெறப்பட்டுள்ளதையடுத்து கம்பெனியானது தங்களுக்கு எதிரான செயல்முறைகளை தொடங்கியுள்ளது. எனவே, நாங்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தங்களின் கடன் கணக்குக்கு எதிராக உள்ள கடன் நிலுவை தொகையை வட்டியுடன் சேர்த்து செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் கம்பெனியானது அதன் கடன்களை வட்டி மற்றும் செலவுகளுடன் சேர்த்து பெறுவதற்காக மேற்படி சட்டம் பிரிவு 13 உபபிரிவு (4)-ன் கீழ் கீழே குறிப்பிட்டுள்ள ஈட்டுறுதி சொத்தினை கைவசப்படுத்துவதற்கு தங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அறிவிப்பு கம்பெனிக்கு கிடைக்க கூடிய வேறு எந்த தீர்வுக்கும் எந்த பாரபட்சமும் இல்லாமல் தங்களுக்கு அளிக்கப்படுகிறது என்பதை குறிப்பிட தேவையில்லை.

வ. எண்	கடன்தாரர் / இணை கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி	கடன் தொகை	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவை தொகை
1.	கடன் கணக்கு எண்: X0HECOI00000528404 and X0HECOI00000639557 1. சரவணகுமார் J, 2. சுஜாதா S இருவரின் முகவரி: பழைய எண்.230, புதிய எண்.206, 5வது தெரு, காந்திபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641012. லோட். ராஜ்குமார் J- அவர்களின் அனைத்து சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள். பழைய எண்.230, புதிய எண்.206, 5வது தெரு, காந்திபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641012. லோட். விஜயலட்சுமி J- அவர்களின் அனைத்து சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள். பழைய எண்.230, புதிய எண்.206, 5வது தெரு, காந்திபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641012.	ரூ. 30,00,000/- & ரூ. 10,00,000/-	21-08-2025 & 21-08-2025 அன்று வரை ரூ. 24,20,738/- மேலும் பின் வட்டியுடன்

அட்டவணை சொத்து: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கணபதி துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, கணபதிபுரம் 5வது தெரு, சர்வே புல எண்கள். 217, 218, 219, டவுன் சர்வே எண். 11/936-937-ன் படி 1433 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும், அதனுடன் மேற்குறிப்பிட்ட சொத்தின் அனைத்து பிற வசதி உரிமைகள் உட்பட, மற்றும் எல்லைகள் வகை எண்.1 : 1033 சதுர அடி : ரங்கய்ய கவுண்டர் அவர்களின் வீட்டிற்கு வடக்கே, கிழக்கு மேற்காக சந்து, ரங்காராஜ் நாயடு அவர்களின் வீட்டிற்கு தெற்கே, சாமுண்டீஸ்வரி அவர்களின் பிற சொத்திற்கு கிழக்கே, காந்திபுரம் தெரு எண். 5-க்கு மேற்கே. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கில்: 57.0 அடி, கிழக்கு மேற்காக தெற்கில்: 57.0 அடி, தெற்கு வடக்காக கிழக்கில்: 17.3 அடி, தெற்கு வடக்காக மேற்கில்: 19.0 அடி, வகை எண்.2 : 400 சதுர அடி : சண்முகம் அவர்களின் வீடு மற்றும் பொது சுவருக்கு வடக்கே, ரங்காராஜ் அவர்களின் வீட்டிற்கு தெற்கே, முருகேச முதலியார் அவர்களின் வீட்டிற்கு கிழக்கே, N.முருகய்யன் & கோ-ன் பிற சொத்து மற்றும் பொதுநடைபாதைக்கு மேற்கே. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கில்: 20.0 அடி, கிழக்கு மேற்காக தெற்கில்: 20.0அடி, தெற்கு வடக்காக கிழக்கில்: 20.0 அடி, தெற்கு வடக்காக மேற்கில்: 20.0 அடி,

2.	கடன் கணக்கு எண்: ML01TTU00000061074 1. கனகராஜ் ஹரிபிரசாத் (விண்ணப்பதாரர்), 2. செல்வராஜ் பவித்ரா (இணை விண்ணப்பதாரர்), 3. சுசீலா கனகராஜ் (இணை விண்ணப்பதாரர்), 4. கனகராஜ் ரங்கசாமி (இணை விண்ணப்பதாரர்), 5. கருடா கிரேன் சர்வீஸ் (பிரதிநிதியாக அதன் உரிமையாளர் கனகராஜ் ஹரிபிரசாத்) (இணை விண்ணப்பதாரர்), அனைவரின் முகவரி: எண்.9/195A, திருமுருகன் தெரு, ஆலம்கொம்பு, ஜடையம்பாளையம், சிறுமுகை, கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641 302.	ரூ. 25,00,000.00	07.08.2025 & 07.08.2025 அன்று வரை ரூ. 26,18,865.00 மேலும் பின் வட்டியுடன்

அட்டவணை சொத்து: கோயம்புத்தூர், பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் தாலுகா, ஜடையம்பாளையம் கிராமத்தில், சர்வே புல எண்.744/2-ன் படி புஞ்சை ஏக்கர் 2.28-க்கு சமமான ஏக்கர் 1.14 நிலம் வீட்டு மனை பிரிவுகளாக மேம்படுத்தப்பட்டு அதில் உள்ள மனை எண்.14ன் காலி நிலம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். கீழ் கண்ட எல்லைகள் மற்றும் அளவுகளுக்குட்பட்டது. மனை எண்.13-க்கு வடக்கே, மனை எண்.15-க்கு தெற்கே, வெள்ளிங்கிரி அவர்களின் சொத்திற்கு மேற்கே, 18 அடி அகல தெற்கு வடக்கு சாலைக்கு கிழக்கே, இதன் மத்தியில் கிழக்கு மேற்காக இருபுறமும் : 32 அடி, வடக்கு தெற்காக இருபுறமும் : 65 அடி. மொத்தம் சேர்த்து 2080 சதுர அடி அல்லது 0.04 சென்ட் 336 சதுர அடி காலி நிலத்துடன் வழக்கமான சாலைகள் மற்றும் பொது நடைபாதைகள் பயன்படுத்தும் உரிமை. மேற்குறிப்பிட்ட சொத்து ஜடையம்பாளையம் கிராம பஞ்சாயத்து போர்டு எல்லைக்குட்பட்டது.

தேதி : 30.08.2025
இடம் : கோயம்புத்தூர்
அதிகாரப்பூர்வ அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

ரைட்ஸ் லிமிடெட்
(ஓர் இந்திய அரசு நிறுவனம்)
ஷிகார், பிளாட் எண்.1, செக்டார்-29, குருகிராம்-122001
CIN எண் : L74899DL1974GOI007227

கொல்கத்தா / பாட்னா RITES அலுவலகங்களில் 17-19 செப்டம்பர், 2025 வரை ஆன்லைன் மூலம் நேர்காணல் முறையில் பின்வரும் பதவி(கள்) / துறைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் கடன உழைப்புடைய தொழில் நிபுணர்கள் தேவை.

VC எண்கள்	பதவியின் பெயர்	காலியிட எண்ணிக்கை
CL/36/25	ஏரசிடெண்ட் லேப் டெக்னீஷியன்	03 UR

RITES அலுவலகங்களில் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் பின்வரும் பதவி(கள்) / பிரிவுகளுக்கு நிரந்தர அடிப்படையில் பொறியியல் துறை நிபுணர்கள் தேவை.

VC எண்கள்	பதவியின் பெயர்	காலியிட எண்ணிக்கை
RG/01-R1/25	மேலாளர்/சிவில் (போக்குவரத்து திட்டமிடுபவர்/போக்குவரத்து பொறியாளர்)	01
RG/05-R1/25	மூத்த மேலாளர் / இயந்திரவியல் (காற்றோட்ட நிபுணர்)	01
RG/06-R1/25	மூத்த மேலாளர் / ES&T (E&M நிபுணர்)	01
RG/07-R1/25	உதவி மேலாளர் / சிவில் (பாலம் பொறியாளர்)	02
203/R1/24	உதவி மேலாளர் / ES&T	01

விரிவான விவரங்களுக்கு, விண்ணப்பதாரர்கள் RITES வலைத்தளமான www.rites.com இல் Career Section கீழ் வெளியிடப்பட்ட விரிவான விளம்பரத்தைப் பார்க்கலாம்.

SOUTHERN RAILWAY

RAILWAY RECRUITMENT CELL, CHENNAI
No.5 Dr. P.V. Cherian Crescent Road,
(Behind Ethiraj College), Egmore, Chennai – 600 008

INDICATIVE ADVERTISEMENT

RECRUITMENT AGAINST SCOUTS & GUIDES QUOTA FOR THE YEAR 2025-26

(Employment Notice No.RRC /01/S&G/2025-26 Dated 30.08.2025)

Closing Date & Time for receipt of Application: 29/09/2025 at 23.59 Hrs

Online Applications are invited from eligible Indian Citizens, for recruitment to Posts in Level 1 in 7th CPC Pay Matrix in Southern Railway & ICF, against Scouts & Guides Quota for the year 2025-26.

Quota	Pay Level	No. Posts
Southern Railway	Level - 1	12 (2 Posts for each Division, viz., Chennai, Tiruchchirappalli, Madurai, Palakkad, Tiruvananthapuram and Salam)
ICF	Level - 1	02 (TWO)

Note: The posts detailed above are open to all regardless of Community and there is no reservation for any community.
For further details regarding Age, Educational Qualification, Exemptions, eligibility criteria, method / mode of recruitment etc., please refer to Employment Notice No. RRC/01/S&G/2025-26 dated 30/08/2025 published in Employment News / Rozgar Samachar dated 30/08/2025 – 06/09/2025 or visit website www.rrcmas.in.

Beware of Job-racketeers trying to deceive the candidates by false promises of securing jobs in Railways either through influence or by use of unfair and unethical means. Southern Railway has not appointed any agents or training agencies. All recruitments by Southern Railway are purely MERIT BASED.

Issued on 30-08-2025
Chairman
Railway Recruitment Cell/Chennai

அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட்
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: எண். 15/9A, வள்ளுவர் தெரு, சிவானந்தா காலனி, கோயம்புத்தூர் - 641 012.
CIN : L17115TZ1988PLC002269
Phone : 0422-2491504, 2491505
website: www.acmills.in, email: ambika@acmills.in

37வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்களிப்பிற்கான தகவல் அறிவிப்பு

அன்பார்ந்த பங்குதாரர்களே,

நிறுவனத்தின